★ விலைரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 புரட்டாதி 26 முஹறம் 5 இதழ் 241
யாழ்ப்பாணம் புதன்கிழமை 12 10 83

## தி. மு. கழகத்தினர் நடத்திய கண்டன ஊர்வலம்!

### சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொண்டனர்

[சென்னை]

இலங்கையில், தமிழ்ப் பிரதேசங்களில் பெரும்பான்மை இனத்தவரின் குடியேற்றங்களைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தினர்.

தி. மு. க. வின் சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும், ஏராளமான தொண்டர்களும் பல நூற்றுக் கணக்கில் கலந்து கொண்ட இந்த ஊர்வலத்தில் திருகோணமலையில் அமெரிக்க இராணுவத் தளம் அமைப்பதற்கான முயற்சிகளைக் கண்டிக்கும் கோஷங்களும் எழுப்பப்பட்டன.

இதே வேளை திருகோணமலை விவகாரத்தைக் கண்டித்துச் சென்னையிலுள்ள இலங்கை உதவித் தூதுவராலயம் முன்பாக மறியல் நடத்த தி.மு.க. வினர்க்கு அனுமதியளிக்கப் பொலிஸார் மறுத்துவிட்டனர். [கு]

# "இலங்கைத் தமிழர் உரிமை பறிக்கப்படுவதை இந்தியா பார்த்துக்கொண்டிருக்காது!"

### நியுயோர்க்கில் தமிழக அமைச்சர்

(நியுயோர்க்)

"இலங்கையில் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கங்கள் ஈடுபட்டு வந்துள்ளன" என்று தமிழக மின்சக்தி அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நியுயோர்க்கில் நேற்று நிருபர்கள் மத்தியில் பேசுகையில் இதனைத் தெரிவித்த திரு. இராமச்சந்திரன் "தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுவதை இந்தியா, குறிப்பாக தமிழ்நாடு பார்த்துக்கொண்டிருக்காது" என்றும் எச்சரித்தார்.

நியுயோர்க்கில் நடைபெற்ற ஐ. நா. கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்கு வந்த இந்தியக்குழுவுடன் வந்திருந்த திரு. இராமச்சந்திரன் நேற்று நிருபர்கள் மத்தியில் உரையாற்றினுர்.

தமிழ்நாட்டு அரசியற்கட்சிகள் இலங்கை விவகாரத்தை தமது அரசியற் செல்வாக்கிற்காக பயன்படுத்திவருவதாக ஐ. நா. பொதுச் செயலாளரிடம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த கருத்தை முற்றாக மறுத்த திரு. இராமச்சந்திரன், தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர் என்றும், இதனை தமிழ்நாடு பொறுத்துக் கொண்டிருக்காது என்றும் கூறினுர். (கு)

### இந்திரா சத்வால் சந்திப்பு

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. சத்வால் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து இருவரும் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது. [கு]

### மானிப்பாய் துப்பாக்கிச் சூடு: மனித உரிமைகள் இயக்கத்துக்கு மகஜர்

[பண்டத்தரிப்பு]

மானிப்பாயில் வைத்து ஆயுதப் படையினரால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்ட தமது மகனின் மரணம் குறித்து விசாரணை நடத்துமாறு சங்கானையைச் சேர்ந்த தந்தை ஒருவர் சர்வதேச மனித உரிமைகள் இயக்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மானிப்பாயில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் தமது மகனை இழந்த சங்கானையைச் சேர்ந்த திரு. எஸ். செந்தில்நாதன் சர்வதேச மனித உரிமைகள் இயக்க இலங்கைக் கிளைக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஜூலை மாதம் 24-ம் திகதி காலை யாழ். நகரிலிருந்து பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த எனது மகன் ஜயேந்திரன் (வயது 17) பஸ் வண்டியிலிருந்து பலவந்தமாக இறக்கப்பட்டு பஸ்ஸில் பிரயாணம் செய்த வேறு ஏழு பேருடன் வரிசையாக நிற்கவிடப்பட்டு சீருடை தரித்த ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து போதிய சாட்சியங்கள் இருக்கின்றன. பூரணமான நீதி விசாரணை நடத்தப்படும் பட்சத்தில் சாட்சிகளை என்னுல் ஆஜர் செய்ய முடியும்.

## மினி பஸ்மீது குண்டு வீச்சு!

### காங்கேசன்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான மினி பஸ், இனந்தெரியாத நபர்களால் பெற்ரேல்குண்டு வீசி எரிக்கப்பட்டுள்ளது!

நேற்று அதிகாலை இச்சம்பவம் நிகழ்ந்தது.

காங்கேசன்துறை சந்திக்கு அண்மையில் வைத்து இப்பஸ்ஸுக்கு பெற்ரேல்குண்டு வீசப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இந்த மினிபஸ்ஸை நிறுத்தி சாரதியும், கண்டக்டரும் ஆலயத்தை தரிசித்துவிட்டு காங்கேசன்துறை சந்தியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொழுது, நடேஸ்வராக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள பிள்ளையார் கோவில் முன்றலில் இனந்தெரியாத மூன்று நபர்கள் பெற்ரேல்குண்டு வீசியதாகவும், சாரதியும் கண்டக்டரும் மினிபஸ்ஸைவிட்டு தப்பிஓடியதாகவும் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்குண்டுவீச்சுச் சம்பவம் நடைபெற்றபோது பிரயாணிகள் எவரும் இருக்கவில்லை. (மா)

### பாண் ரூ.2.50! நிறை குறைவுக்கு அபராதம்

[யாழ்ப்பாணம்]

கரவெட்டி மாலி சந்தியில் பாண் 2ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டது.

மாலி சந்திக்கடையொன்றில் 450 கிறும் நிறை இருக்க வேண்டிய பாணை 410 கிறும் நிறையுடன் விற்றது விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக அக்கடையில் இருந்த 50 றாத்தல் நிறை குறைந்த பாண் 2 ரூபா 50 சதம் வீதம் விற்பனை செய்யப்பட்டது.

மற்றும் கடைகளிலும் நிறை குறைந்த பாண் 2 ரூபா

(8-ம் பக்கம் பார்க்க)

### சுயநினைவற்ற நிலையில் அரியாலைவாசி ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

அடிகாயங்களுடன் சுயநினைவற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சில மணித்தியாலங்களில் அங்கு மரணமானுர்.

இவர் மரணம் யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்களிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரியாலையைச் சேர்ந்த எம். கணேசபிள்ளை அல்லது முத்துலிங்கம் (40 வயது) என்றழைக்கப்படுபவரே மரணமானவராவார்.

மரணவிசாரணை நடத்திய யாழ். நீதிமன்ற நீதவான் எஸ். நாகராசா, சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்ட பின்னர், விசாரணை மேற்கொள்ளுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். குற்றத்தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் கே. முத்துத்தம்பி தலைமையில் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரசபைக்கு புதிய கூட்டணி உறுப்பினர்கள்

### ஐ. தே. க. மாஜி அங்கத்தவர் வெளிநாட்டில்

[திருமலை]

திருகோணமலை நகரசபையில் காலியான தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களின் இடத்திற்குப் புதிய உறுப்பினர்கள் தேர்தல் உதவி அதிகாரியினுல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் அமைப்பின் 6-வது திருத்தத்திற்கமைய பிரிவினைக்கு எதிராகச் சத்தியப் பிரமாணம் செய்யத் தவறியதையடுத்துப் பதவி இழந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் 9 உறுப்பினர்களுக்குப் பதிலாகவே புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலின்போது கூட்டணி சமர்ப்பித்த 16 பேர் கொண்ட பட்டியலில் மிகுதியாகவிருந்த 7 பேரே இப்போது மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருவாளர்கள் இராசையா தர்மலிங்கம், ஆறுமுகம் செல்லையா, சின்னையா இராசதுரை, நடராஜா துரைராஜா, சாமிக்கண்ணு பன்னீர்ச்செல்வம், கந்தசாமி சதானந்தஜோதி. அப்துல் யூனுஸ் சகாப்தீன் ஆகியோருக்கு அவர்களது நியமனம் குறித்து நகரசபைச் செயலாளர் திரு. எம். வேலுப்பிள்ளை கடிதம் அனுப்பியுள்ளார்.

12 உறுப்பினர்களைக் கொண்ட திருமலை நகரசபையில் ஐ. தே. க. முதலாவது உறுப்பினரான டாக்டர் சி. சிவானந்தன் உறுப்பினர்பதவியிலிருந்தும் ஐ. தே. க.விலி

(8ம் பக்கம் பார்க்க)

### தென் கொரிய அமைச்சர்கள் மரணச்சடங்கு நாளை

[சியோல்]

ரங்கூன் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பலியான தென்-கொரிய அமைச்சர்கள் நால்வர் உட்பட 16 பேரினதும் மரணச்சடங்குகள் முன்கூட்டியே நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

சோகத்தில் ஆழ்ந்துள்ள தென் - கொரிய நகரங்கள் தோறும் அரைக்கம்பத்தில் தேசியக்கொடிகள்பறக்கவிடப்பட்டுள்ளன.

மரணச்சடங்கில் கலந்து கொள்ளச் சுமார் 10 லட்சம் மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை அதிபரின் விசேட பிரதிநிதியாக மரணச்சடங்குகளில் கலந்து கொள்ளும் பிரதி வெளிவிவகார அமைச்சர் திரு. டிரோன் பெர்ணுண்டோ இன்று அதிகாலை சியோல் வந்து சேர்ந்தார். [கு]

### தொண்டமான் இன்று தமிழகம் விஜயம்

(புதுடில்லி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் இன்று புதுடில்லியிலிருந்து தமிழகம் பயணமாகிறுர்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியையும் இதர அமைச்சர்கள் சிலரையும் புதுடில்லியில் சந்தித்த இவர் இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர் நிலைபற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தினுர். (கு)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு மிக அண்மையில், வட்டுக்கோட்டை பழைய ஆஸ்பத்திரி வீதியில் மின்சார வசதியுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி தி. கனகரத்தினம், பழைய ஆஸ்பத்திரி வீதி, வட்டுக்கோட்டை அல்லது தி.வெற்றிவேலுப்பிள்ளை, 'ஈழநாடு'. 9243

வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியிலிருந்து 100யார் தூரத்தில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி மகேஸ்வரி ராமநாதன்,மே/பா அமரர் வி. நாகலிங்கம் வழக்கறிஞர், மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை. 9242

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட இரு புத்தம் புதிய ''P. M. T.'' கடைச்சல்இயந்திரங்கள் (LATHE) உடன் விற்பனைக்குண்டு. (BED)பெற் நீளம்-4½ அடியும் 6 அடியும். நேரில் பார்க்கலாம். டொலர் அலுமினியத் தொழிற்சாலை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 9231

கண்டி வீதியில் கச்சேரிக்கு அருகாமையில் கிழக்கு ஒழுங்கையில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: மகேந்திரன், 18/1,கச்சேரி கிழக்குஒழுங்கை, யாழ்ப்பாணம். 9241

கோண்டாவில் கிழக்கு எம். எஸ். இன்டஸ்றீஸ் லிமிட்டெட்டுக்கு (ஆணித் தொழிற்சாலை) அருகாமையில் 10¾ பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கனகராசா பஞ்சலிங்கம், செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு. 9235

Ford Cortina Car நல்ல பார்வையிலும் பாவனைக்கு உகந்த நிலையிலும் விற்பனைக்கு உள்ளது. பார்வையிடும் இடம்: செ. யோகலிங்கம், வட்டுக் கிழக்கு, சித்தங்கேணி. 9225

புத்தம் புதிய National 17'' Black and White டெலிவிஷன் ஒன்றும்-நல்லநிலையில்பாவித்து கொண்டிருக்கும் Phillips 27'' Super Colour டெலிவிஷன் ஒன்றும் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். விலை விபரங்களுக்கு: யஸ்ரின் பஸ்தியாம்பிள்ளை, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 9223

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், சீமெந்துத் தொழிற்சாலை ஆகியவற்றுக்குஅண்மையில் 4 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. வேலுப்பிள்ளை (றெயில்வே பென்சனியர்), வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பளை. 9194

டெலிகா புதிய மொடல் வான் றேடியோவுடன் உன்னத நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. டெலிபோன் 22628, பாம் கோட், (PALM COURT) . 202, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 9210

''வொக்ஸ்வேகன்'' வான் 33 ஸ்ரீ - வரிசை இலக்கமுடையது. பாவனைக்குகந்த உன்னத நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் நேரடித் தொடர்பு கொள்ளவும். நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ் 141, 143, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 9167

## விற்பனைக்கு

நெஷனல் பென் சொனிக்லெட் சொனி 3900 (தன்னியக்கம்) இரண்டு பக்கமும் தொடர்ச்சியாக இயங்கக் கூடிய (100 W) ஒலிபரப்பும் சக்தியுடையது. விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- ஸ்ரார் வீடியோ கிளப், 21/5, பிறவுண் வீதி, 1-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 9193

Telefunken TV 22'' கலர் Stereo 1972 மொடல். Canon AE I. கமரா Zoom Lens 35-75 m. m. 70 - 150mm தொடர்பு கொள்க. க. சிவநேயன் நடுத்தெரு காரைநகர். 9215

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் போக்குவரத்து நிறுவனம் ஒன்றிற்கு 10 வருட அனுபவமுடைய, நாற்பது வயதுக்கு மேற்பட்ட டீசல் மெக்கானிக் உடனடியாகத் தேவை. தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும். 20-10 83க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:9213, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9213

எஸ்-லோன் பைப் வியாபார நிலையமொன்றில் பைப்வகைகள் ஏற்றி இறக்க கூலித் தொழிலாளர்கள் உடன் தேவை. வயது 25க்கும் 35க்கும் இடைப்பட்டோர் கீழ்க் காணும் விலாசத்திற்கு நற்சாட்சிப்பத்திரங்களுடன் வரவும். அகதிகளுக்கு முதல் இடம் கொடுக்கப்படும். நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ், எஸ்-லோன் டெலிவரிப் பொயின்ற், 158, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம். 9177

எவ்வகை இனங்களாயினும் மூன்று றாத்தலுக்கு மேற்பட்ட கோழிகள் தேவை. நேரில் வந்து பெற்றுக்கொள்வோம். விலை றாத்தல் 11 ரூபா முதல் 13 ரூபாவரை. ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23131. (9214)

அலுமினியம் வார்ப்பு வேலையில் அனுபவமிக்கவர்கள் தேவை. குறைந்தது 3 வருட அனுபவம் அவசியம். விண்ணப்பிக்கவும்: டொலர் அலுமினியத் தொழிற்சாலை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 9230

பருத்தித்துறையிலுள்ளஆங்கில வைத்தியசாலைக்கு பெண் உதவியாளர் தேவை. 20-10-83ற்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பரஇல: 9219, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9219

## சேவை

திருமணம் மற்றும் சகல விதமான வைபவங்களுக்கும் சிறந்த முறையில் வீடியோ (T V) யிலும் புகைப்படத்திலும் படம்பிடிக்க கொழும்பில் பிரபல்யமான தர்மாஸ் ஸ்ரூடியோவை நாடுங்கள் 50 விதானையார் வீதி- சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23379. (9233)

மணமகன் / மணமகள் சம்பந்தப்பட்ட திருமண சேவைக்கும்,காணி, வீடுவளவு சம்பந்தப்பட்ட தரகு முகவர் சேவைக்கும் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்- மல்ரி சேவிசஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9202

## வாடகைக்கு

Austin Delivery Van வாடகைக்கு உண்டு. 2 தொன் பாரமேற்ற உகந்தது. உங்கள் தேவை எதுவாயினும் உடனே தொடர்பு கொள்ளவும். மே/பா விளம்பர இல: 9199, ஈழநாடு, யாழ்ப்பாணம். 9199

கே. கே. எஸ். வீதி,ஒளவையார் சிலைச்சந்திக்கு அண்மையில், உடன் ஹோட்டல் அல்லது வேறுவியாபாரம் செய்யக் கூடிய, தொலைபேசி, குழாய் நீர், மின்சார வசதிகளுடனுன கடை வாடகைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23541. 9201

## பயிற்சி

Greek கப்பல்களில் வேலை வாய்ப்பு முன்னுரிமையும், பதவி உயர்வும் பெற Spoken Greek குறுகியகால பயிற்சி நெறி. இல. 12, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 9238

## கல்வி

தூய, பிரயோக கணிதம் உயர்தரம் '84, 85'. ஆசிரியர் திரு. சிவா. துரை B.Sc. (Special). வாரஇறுதி அல்லது கிழமைநாள் வகுப்பிற் சேரலாம். இரசாயனம், பௌதிகமும் நடாத்தப்படும். ஆரம்பம்: 16-10-1983 ஞாயிறு 10 a. m. The Jaffna Education Centre, 22,இராமையா செட்டியார் ஒழுங்கை, (சாந்தி சினிமாவிற்கு அண்மை). 9226

## வகுப்புகள்

விஜயதசமியன்று(16-10-83) புதிய வகுப்புகள் ஆரம்பம். Diploma in Draughtsmanship (சனி, ஞாயிறு வகுப்புகள் 7 மாத காலம்) மற்றும் C. E. I. Part 1, City and Guilds (Telecomm and Electricals) (மேலதிக விபரங்கள் நேரில், JASE Institutes, 21/6, வேம்படிவீதி, (றிம்மர் மண்டபம்) யாழ்ப்பாணம். 9196

## தவறிவிட்டது

6-10-83 காலை திருகோணமலை-யாழ். மினி பஸ்ஸிலிருந்து, முருகண்டிக்கும் கைதடிக்குமிடையில் கழுப்பு தோற்பை காசோலை புத்தகம், சேமிப்பு புத்தகம் ஆகியவற்றுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து தகவல் தரவும் அல்லது ஒப்படைக்கவும். பா. மனோகரன், 3/1, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். 9248

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்க கிரி' அளவெட்டி (தபாற்கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9086

## FOR SALE

Mitsutbishi Lancer Station Wagon 1979/80 model. Air conditioned Registered in May 83. 35, Clock Tower Road, Jaffna. 9247

SS-1 Honda 125 Seven thousand miles offer over 17500-00 New National Panasonic RX 5100T Stereo offer over 2500-00 Box Camera Kodak used Hittachi offer over 1500-00 gold fish call at 6, St Anne's Lane (Lane opposite Manipay Ladies College.) 9246

## WANTED

London qualified Computer Programmer, Former, Executive Colombo Firm, seeks any Job. 178, Kandy Road, Jaffna. 9221

## பிறந்ததின வாழ்த்து

சுதாகர்



கண்டி வத்துகாமத்தைச் சேர்ந்த இரா. சுதந்திர நாதன் தம்பதிகளின் புதல்வன் சுதாகர் இன்று தனது மூன்றுவது பிறந்த நாளை கிளிநொச்சியில் கொண்டாடுகிறுர்.

இவரைப் பல்லாண்டு வாழ்கவென உற்றுர், உறவினர் நண்பர்கள் வாழ்த்துகின்றுர்கள்.9234

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற பருத்தித்துறை வீரப்பாபிள்ளை சின்னத்தம்பியின் மரணசாதனமில்லாதசொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்.

மரண சொத்து நியாயாதிக்க } இல. T 1179

ரஞ்சினி சின்னத்தம்பி ஐயனூர்வீதி, பருத்தித்துறை.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்டமரணசாதன மில்லாத சொத்துவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில்தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்கள் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ம் திகதி.

றிச்சேட் ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

வரைவு
மனுதாரின் சட்டத்தரணி 9170

## காணவில்லை.

ஞா. சுதேந்திரன்



இப்படத்திலுள்ள ஞா. சுதேந்திரனை (வயது 16 உயரம் 5' 3'') கடந்த மூன்று வாரங்களாகக் காணவில்லை. நாடியின் வலதுபுறத்தில் சிறு மச்சம் உண்டு. கண்டவர்கள் தயவுசெய்து தகவல் தரவும். ஞா. ஞானேந்திரன், கற்கோவளம் வடக்கு, பருத்தித்துறை. 9222

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் இல. 645/9 கடற்கரை வீதியைச்சேர்ந்த காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ் இராஜசூரியர் என்பவரின் மரணசாதன விடயத்தில்.

மரணமெய்தியவர்

1. சோபிதா பத்மநாதன் இல. 645/9 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
2. துரைசாமி யோசேப் பத்மநாதன் இல. 10 பிளெட் ஜார்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்.

மரண சாதன நியாயாதிக்கம் } இல. 3756

மனுதார்கள்

எதிர்

1. லியனுர்ட் கென்னடி தசரதன் இராஜசூரியர்
2. ஜெறுட் ஸ்ரீதரமோகன் இராஜசூரியர்
3. அனுஜா சிற்றம்பலம் எல்லோரும் இல. 645/9 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின்மரணசாதனத்தை எண்பிப்பதற்காக/மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு 10ம் மாதம் 20ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

வரைவு
இ. கமலநாதன்
மனுதாரின் சட்டத்தரணி

1983ம் ஆண்டு 10ம் மாதம் 10ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 9232

## இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு தாயகம் திரும்பிய அகதிகளுக்கான உதவியை

# இந்திய அரசு அதிகரித்தது!

புதுடில்லி, அக். 11

அண்மையில் இடம்பெற்ற இனக் கலவரங்களை யடுத்து இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி தமிழ்நாட்டில் தங்கியுள்ள அகதிகளுக்கான நிவாரண உதவிகளை இந்திய மத்திய அரசு அதிகரித்துள்ளது.

ஐந்து பேரைக் கொண்ட குடும்பமொன்றிற்கு முன்னர் வழங்கப்பட்டுவந்த 90 ரூபா உதவித் தொகை தற்போது 357 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அகதிகளுக்கு துணிகள், பாத்திரங்கள் வாங்க நிவாரண உதவியாக வழங்கப்பட்டுவந்த 379 ரூபா தற்போது 579 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இந்திய வம்சாவளி அகதிகள் தற்போது மண்டபம், ராமநாதபுரம், திருச்சி ஆகிய இடங்களிலுள்ள முகாம்களில் தங்கியுள்ளனர். (வெ)

## அமெரிக்க உள்துறை அமைச்சர் ராஜினமா

வாஷிங்டன், அக். 11

அமெரிக்க உள்துறைஅமைச்சர் திரு. ஜேம்ஸ்வாட் ராஜினமாச் செய்துள்ளார். இவருடைய ராஜினவை அமெரிக் ஜனதிபதி திரு. றேனல்ட் றீகன் ஏற்றுக் கொண்டார். (வெ)

## றம்பால் இந்திரா சந்திப்பு

புதுடில்லி, அக், 11

புதுடில்லியில் அடுத்தமாதம் 23ம் திகதி ஆரம்பமாகவுள்ள பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மகாநாடு தொடர்பாக இவ்வமைப்பின் செயலாளர் திரு. சிறீதத் றம்பால் நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். (வெ)

## சென்னையில் தீர்வையற்ற கடை!

சென்னை, அக். 11

சென்னைமீனம்பாக்கம்விமான நிலையத்தின் அருகே தீர்வையற்ற வர்த்தக நிலையம்ஒன்றை அமைக்க 500ஏக்கர்நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (வெ)

## கப்பல்சேவை அக். 23ம் திகதியுடன் நிறுத்தம்

சென்னை, அக். 11

தலைமன்னர்- ராமேஸ்வரம் கப்பல்சேவை இம்மாதம் 23ம் திகதியுடன் நிறுத்தப்படுமென்று இந்திய கப்பல் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இக்கப்பல்சேவை மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் 1ம் திகதி ஆரம்பமாகுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னருக்கான கடைசிக் கப்பல்சேவை இம்மாதம் 21-ம் திகதியும் தலைமன்னரிலிருந்து ராமேஸ்வரத்திற்கான கடைசிக் கப்பல் சேவை இம்மாதம் 22-ம் திகதியும் இடம்பெறும். (வெ)

## வைத்தியத் துறை நோபல் பரிசு

ஒஸ்லோ, அக். 11

வைத்தியத் துறைக்கான 1983-ம் ஆண்டு நோபல்பரிசு அமெரிக்கப் பேராசிரியையான பார்பரா மக்களின் பேட்டிக்கு வழங்கப் படும்என அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## "உலகில் யுத்த மேகங்கள்" இந்திரா எச்சரிக்கை

புதுடில்லி, அக். 11

''உலகில் யுத்த அபாயம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அண்டை நாடுகளிலும் நவீன ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும்''.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி புதுடில்லியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

''இந்தியா சமாதான வழிகளில் பேச்சுவார்த்தை மூலமே எந்தவொரு பிரச்னைக்கும் தீர்வு காண விரும்புகிறது. இந்தியாவின் பாதுகாப்புக்கும் இன்று அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. இதனல் இந்திய மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்''. (வெ)

## ஐ.நா. செயலாளர் பேச்சு நடத்தினர்

நியுயோர்க் அக். 11

ஆப்கானிஸ்தான் பிரச்னை குறித்து ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. பிரெஸ்டி கியூலர் ஆப்கான் வெளிநாட்டமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

திரு. கியூலர் இது தொடர்பாக பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் ஜனப் ஹானுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (வெ)

## மாணவர்களுக்குச் சீருடை

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வடபகுதி கல்லூரிகளில் கல்வி பயின்றுவரும் மாணவர்களுக்கு 'றெட்பாணு' நிறுவனமும் 'சர்வதேச மனித உதவிகள் திட்ட' நிறுவனமும் (ஐகாப்) இணைந்து சீருடைகளை இலவசமாக வழங்கி வருகிறது. இம் மாணவர்களுக்குத் தேவையான தளபாடங்களையும் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கும் இந்நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை 'றெட்பாணு' திட்ட இணைப்பு அதிகாரி திரு. ஏ. ஜி. எஸ். பாலச்சந்திரனும் 'ஐகாப்' நிறுவனத்தின் யாழ். பிரதிநிதி திரு. செருபீமும் இணைந்துகவனித்து வருகின்றனர்.

இதுகுறித்து திரு. பாலச்சந்திரன் பின்வரும் தகவல்களைத் தருகிறுர்.

வடபிராந்திய கல்விப்பணிப்பாளருக்குக் கீழ் இயங்கும் 13 கல்வி வட்டாரங்களில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, உடுப்பிட்டி, மானிப்பாய், பருத்தித்துறை, நல்லூர், வேலணை, புங்குடுதீவு ஆகிய 8 வட்டடாரங்களில் உள்ள பாடசாலை மாணவிகளுக்கு இதுவரை சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளின் ஆண்பிள்ளைகளுக்கு விரைவில சீருடைகள் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை, பரந்தன், கிளிநொச்சி, காங்கேசன்துறை, கோப்பாய் ஆகிய வட்டாரங்களில் உள்ள பாடசாலைகளிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான சீருடைகளை விநியோகிக்கும் பொறுப்பை 'ஐகாப்' ஸ்தாபனம் ஏற்றுள்ளது.

இதே வேளையில், சாவகச்சேரி, உடுப்பிட்டி, மானிப்பாய் பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய வட்டாரங்களில் உள்ள பாடசாலைகளுக்கு தளபாடங்களை இலவசமாக விநியோகிக்கும் பொறுப்பையும் 'றெட்பாணு' நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது.

நல்லூர், வேலணை, புங்குடுதீவு, கிளிநொச்சி, பரந்தன், வட்டுக்கோடடை, காங்கேசன்துறை, கோப்பாய் ஆகிய வட்டார பாடசாலைகளுக்கான தளபாட விநியோகத்திற்கான பொறுப்பை 'ஐகாப்' நிறுவனம் ஏற்றுகொண்டுள்ளது.

## இஸ்ரேலின் பிரதமராக ஷமீர் பதவியேற்பு

டெல்அவிவ், அக். 11

இஸ்ரேலின் புதிய பிரதமமந்திரியாக திரு. யிட்ஷக் ஷமீர் நேற்றுப் பதவியேற்ருர். இஸ்ரேல் வெளியுறவு அமைச்சராகவும் திரு. ஷமீர் பதவி வகிப்பார்.

இஸ்ரேலின் முன்னுள் பிரதம மந்திரி திரு. மெனச்சம் பெகினின் கொள்கைகளையே தாம் பின்பற்றப் போவதாகவும், இஸ்ரேலின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதே தமது முக்கிய குறிக்கோள் என்றும் திரு. ஷமீர் தெரிவித்தார். (வெ)

## அணுசக்தி மகாநாடு

வீயன்ன அக். 11

சர்வதேச அணுசக்தி ஏஜென்சி மகாநாடு வீயன்னவில் ஆரம்பமாகியுள்ளது.

இம்மகாநாட்டில் அணுசக்தி ஏவுகணைகளின் உற்பத்திகளை மட்டுப் படுத்துவது பற்றி ஆலோசிக்கப்படவுள்ளது. (வெ)

## தமிழ்நாட்டில் 'குட்டிமணிநகர்'

(சென்னை)

திண்டிவனம் கல்லூரி வீதியில் கோவிந்தசாமி நினைவுக் கல்லூரியின் முதல்வர் சி.வி. நடராசன் தலைமையில் தமிழ் ஈழவிடுதலைமுன்னணி பொதுச் செயலாளர் திரு ஈழவேந்தன் 'குட்டிமணிநகரை' த்திறந்து வைத்தார்.

## சுழிபுரம் ஆயுர் ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை!

(சுழிபுரம்)

சுழிபுரம் மாவட்ட அபிவிருத்தி சபை உப அலுவலகம்நடாத்தும்இலவசஆயுள்வேத வைத்தியசாலையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேல் எவ்வித மருந்தும் இல்லாமல் நோயாளர்கள் வெறும்கையுடன் திரும்பிச் செல்கின்றனர்.

வைத்தியர், உதவியாளர் இருவரும் அங்குவரும் நோயாளர்களுக்கு மருந்து இல்லை என்று கையைவிரிக்கின்றனர். தூர இடங்களில் இருந்துவரும் நோயாளர்கள் மிகுந்த கஷ்டத்துடன் எவ்வித பயனும் இல்லாது திரும்பிச்செல்கின்றனர். மேலிடத்திற்கு மருந்து அனுப்புமாறு அறிவித்தும் எல்வித பயனும் இல்லையாம். (அ)

## ரங்கூன் குண்டுவெடிப்பு

# அமைச்சர் தலைமையில் உயர்குழு விசாரணை நடத்தும்

ரங்கூன், அக். 11

ரங்கூனில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய பர்மா அரசாங்கம் அமைச்சர் ஒருவர் தலைமையில் உயர்மட்டக் குழுவொன்றை நேற்று நியமித்தது.

இக்குழுவின் தலைவாக பர்மிய உள்நாட்டலுவல்கள், மத விவகார அமைச்சர் மேஜர் ஜெனரல் மின்கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்குழுவின் செயலாளராக பர்மாவின் பொலிஸ் மாஅதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளையில், இக்குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து பர்மிய மக்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளதாகவும், அவர்கள் தென் கொரிய மக்களைத் தமது நண்பர்களாகக் கருதிவருவதாகவும் பர்மா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பர்மாவின் 36வது சுதந்திர தினத்திற்கு முதல்நாளே இக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கான பொறுப்பை இதுவரை எவரும் ஏற்கவில்லை. இது பர்மியத் தீவிரவாதிகள் அல்லது தென் கொரிய ஒற்றர்களின் செயல் என்று கூறப்படுகிறது.

### மிலேச்சத்தனமான கொலை!

தென் கொரியப் பாராளுமன்றம் இச்சம்பவத்தை 'மிலேச்சத்தனமான கொலை' என்று கண்டித்துள்ளது.

தென் கொரிய ஜனதிபதி சுன்-டூ-ஹீவான் பர்மாவின் தியாகிகள் மண்டபத்திற்கு அஞ்சலி செலுத்துவதற்காக வருவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்னரே இச்சம்பவம் இடம் பெற்றதும், இதில் 4 தென் கொரிய அமைச்சர்கள் உட்பட 23 பேர் பலியானதும், 48 பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

இக்குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது பலியான 4 தென்கொரிய அமைச்சர்களினதும், 15 அதிகாரிகளினதும் மரணச் சடங்குகள் எதிர்வரும் சனிக்கிழமை தென் கொரியாவில் நடைபெறுமென்றும், இவர்களின் சடலங்கள் விசேட பர்மிய விமானமூலம் சிங்கப்பூருக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து தென் கொரியாவின் விமானமூலம் தாயகத்திற்குக் கொண்டுசெல்லப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## ஆந்திரா புயல்சேதம் இந்திரா பார்வையிடுவார்

புதுடில்லி அக். 11

ஆந்திரா பிரதேசத்தில் புயலினல் பாதிக்கப்பட்ட பகுதிகளை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று விமானமூலம் பார்வையிடவுள்ளார்.

இப்பகுதிகளை இந்திய வெளிநாட்டமைச்சர் திரு பி.வி.நரசிம்மராவ்வும், கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு விஜய பாஸ்கரரெட்டியும் ஏற்கனவே பார்வையிட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் 42கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிவழங்குவது குறித்து அதிகாரிகளுடன், அமைச்சர் திரு நரசிம்மராவ் ஆலோசனை நடத்தினர்.

இரண்டு இராணுவ ஹெலிகாப்டர்களும், கடற்படை படகுகளும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொள்ளை நோய் பரவாதவாறு வைத்தியர்கள் சேவையிலீடுபட்டுள்ளனர். காலரா தடுப்பு ஊசி மருந்தும் விமானமூலம் கல்கத்தாவிலிருந்து விசாகப்பட்டினத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. (வெ)

## சிரமதானமூலம் திருத்தப்படும்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாத நிலையில் முட்பற்றைகளும் செடிகளும் நிறைந்திருக்கும் விளாவெளி இந்து மயானத்தை இம்மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை போயா தினத்தன்று இப்பகுதியிலுள்ள பொது நல இயக்கங்களின் ஒத்துழைப்புடன் சிரமதான மூலம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதுதொடர்

(7-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருக என்னது, அவருள், அறிவுடையோனாறு அரசுஞ் செல்லும்.

— புறநானூறு

# நமது நோக்கு

## பாடசாலைகள் புனரமைப்பு

பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களுமே இவ்வருட குழப்பங்களில் அதிகமாகத் தாக்குண்டன. நாடனைத்திலும் இத்தாக்கம் வெவ்வேறு வகையில் காணப்படுகிறது.

கடையடைப்பு ஹர்த்தால் என்றால் வடபகுதி பாடசாலைகள் தாமாகவே மூடப்பட்டு விடும்; இதன் தாக்கம் நீண்டகாலம் நிலைக்குமென அஞ்சவேண்டியிருக்கிறது.

ஆடிக்கலவரம் நாட்டின் பாடசாலைகள் அனைத்தையும் சீர்கெடுத்துவிட்டது. மாணவர் பலரை இனவெறியாரக்கியது. இவற்றின் புனரமைப்பு — குறிப்பாகத் தமிழ் மாணவர்களின்- இன்றைய கலக்க நிலையை நீக்கி காலப்போக்கில் திருந்திய முறைக்கு வழி வகுக்கும் நோக்கமுடையதாயிருக்க வேண்டும். தமிழ் மாணவர்கள் நாட்டின் பல இடங்களிலும் கற்கவேண்டிய நிலை மீண்டும் உருவாக வேண்டி வரும்.

கல்வியைப் பொறுத்தளவில் யாழ்ப்பாணம் குடிபெயர்ந்துவந்த தமிழ் மக்கள் தம்பிள்ளைகளை இயன்றளவு இங்குள்ள பாடசாலைகளிலேயே நிரந்தரமாகச் சேர்த்துவிட விரும்புவர்; இதுபுத்திசாலித்தனமென்று நாம் கருதுகிறோம்.

விருப்பம் நிறைவேற தடைகள் பல உண்டு; தாம் விரும்பிய, தரமான பாடசாலைகள்; அவற்றுள்ளும் தங்கள் வீட்டிற்கு அணித்தானபாடசாலைகள்போன்ற நிறைவேற்ற முடியாத ஆசைகள் இன்றையநிலையில் நியாயமற்றவை; வசதி குறைந்தாலும் வெற்றிடங்களை நாடுவதே விவேகமான செயல்.

என்றுமே தரமான பாடசாலைகள்சிலவற்றைச்சுண்டி எடுக்கும் வழக்கம் எமது மக்களின் சுயநல போக்கின் பிரதிபிம்பம்; சில பாடசாலைகள் செவ்வனே நிர்வகிக்கப்படுவதும் கல்வியில் சாதனைகள் நிகழ்த்தி வருவதும் ஏற்றுக்கொள்ள வேண்டியவை; ஆனல் அவ்வித பாடசாலைகள் சிலவற்றை விட மற்றவையை எட்டிப் பார்க்கும் துணிவு இன்று தவிர்க்க முடியாத தேவை; இவற்றை உயர்த்துவது மக்கள் பொறுப்பு: இதனை உணராத தேசியம் வாய் வேதாந்தம்.

எனவே குடாநாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான கனிஷ்ட பாடசாலைகள், சிரேஷ்ட, உயர்தர கல்லூரிகள் அனைத்திலும், வசதிக்கேற்ப மாணவர்கள் அனுமதிபெற வேண்டும்; பெற்றோர் தயங்கப்படாது; ஆசிரியர் வழிகாட்டிப் புத்தி புகட்ட வேண்டும்; அதிபர்கள்இவ்விடயத்தில் நேர்மையுடனும் பரிவுடனும்நடந்து கொள்வார்களெனலாம்.

இவையெல்லாம் இலகுவில் நிறைவேறமாட்டா வென்பது தெரிந்ததே! ஆனல் ஒரு யுத்தகாலத்தில் நாம் எப்படி புதுப்புது வழிகளைப் பயன்படுத்தி வாழ்க்கை நிலையை வழக்கமான அமைதி நிலைக்கு கொண்டுவர முன்வருவது போல் இன்று இந்தக் கைங்கரியம் கருதப்பட வேண்டியது. சமுதாயத்தின் தேசிய உணர்வு வளர்ச்சியடைவது இவ்வாறே.

இலவசக்கல்வி ஆரம்பமான கட்டத்தில் கல்லூரிகளுக்குப் படையெடுத்த மாணவர் கூட்டம் கொட்டில்களில் குடிபுகுந்ததும், காலகதியில் அக்கொட்டில்கள் மாடி வீடாக நிமிர்ந்ததோடு கல்லூரியின் தரமும் உயர்ந்ததும் இன்றைய கல்லூரி அதிபர்கள் எவரும் மறந்திருக்கமாட்டார்கள்; அன்று அவர்கள் பலர் இந்த அனுபவத்தை நேரில் கண்டவர்கள்.

எனவே இதுஒரு அசாதபரண நெருக்கடியெனக் கணித்து அதிபர்கள் தலைமை ஆசிரியர்கள் ஒன்றுகூடி வித்தியாதிபதியின் அனுசரணையுடன் தக்க மாணவர்களைத் தக்க கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் தாராள மனத்துடன் அனுமதிப்பதோடு, ஆசிரிய நியமனம் - இடம் பெயர்ந்த ஆசிரியர் - பாடசாலைகளின் தேவைக்கொழிய - அவர்களின் வசதிக்கல்லவென்ற கொள்கையை மிகக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஈழம் வந்துவிட்டதே வீடு வந்துவிட்டோமேயென்று குதூகலிப்பது குழந்தைப்பிள்ளைத்தனம்; எங்கள் நாடு அவ்வளவு குறுகியதென கொள்வது மடமை. அரசியல் தீர்வு எவ்வாறுயினும் இதுவே நமது நாடு; நமது தந்தையரும் தாயாரும் நம்முன்னேரும் மகிழ்ந்து வாழ்ந்து வந்த நாடிது. எமது இன்றைய கொடுமைகளுக்குக் குரல் கொடுக்கும் தமிழகத்தை இங்குள்ள சிங்களர், தமிழ் மக்கள் தவறுகப் புரிதல் வரலாற்றைச் சரியாகப் புரியாமையே.

ஈழநாடாகிய இலங்கையில் ஈழத்துப் பூதந்தேவனுர் போன்ற புலவர்களும் சான்றோர்களும், மதுரைத் தமிழ்ச் சங்கங்கள் மூன்றினில் கடைசியான கடைச் சங்கத்தின் உறுப்பினராக இருந்தனர் என்பது சரித்திரம்; பண்டைய சரித்திரம் இன்று திரிக்கப்படுவது தவறு. உண்மைக்குப் புறம்பான வரலாறு நாட்டில் பரவியதால், பரப்பியதால் இங்கு இனபேதம், குரோதமாகி பெருந் தீங்குகளை விளைத்துவிட்டது.

இந்த நிலைமை மாற வேண்டும், காலமெடுக்கினும் நாட்டின் முன்னேற்றத்துக்கு பகைமை நீங்கி நட்பு வளர வேண்டும்.

பாடசாலைகள் கல்லூரிகள், இன்று புண்பட்டிருக்கும் சமூகத்துக்கு சாந்தம், அமைதி ஏற்படுத்தும்வகையில் பணிபுரிவது ஆண்டவன் இட்ட கட்டளையாக ஆசிரியர் கணிக்க வேண்டும்.

சமாதான நிலையில் முன்போல் நாடெங்கிலும் தமிழ் மொழிப் பாடசாலைகள்முன்னேற வழிபிறக்குமென நம்பலாம்.

# "சிங்களப் பகுதிகளில் தமிழர்கள் இனிமேல் வாழ்வது சாத்தியமில்லை"

## யாழ். பொதுவிவகார சபை ஜனதிபதிக்குமகஜர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு முதலிய சிங்களப் பிரதேசங்களுக்கு 'தமிழர்கள் திரும்பிப் போவதானல் அவர்களுக்கு மரணந்தான்' என்று இன்னும் அங்கு சுவரொட்டிகள் காணப்படுகின்றன. இப்போதும் தமிழர்கள் கத்தியால் தாக்கப்படுகின்றனர். அவர்களின் வீடுகள், வியாபார தாபனங்கள் எரிக்கப்படுகின்றன. அங்கு சென்று அச்சமின்றி நடமாடுவது தமிழர்களுக்கு முடியாத காரியமாயுள்ளது. எனவே, தமது உயிர்களையும், உடமைகளையும் அழியவிடுவதில்லையெனத் தமிழர்கள் திடசங்கற்பம் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொது விவகார சபைத் தலைவர் பேராசிரியர் இ. கனகசுந்தரம், செயலாளர் சட்டத்தரணி சி. பொன்னையா ஆகியோர் ஜனதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களது பிரச்னைகளுக்கு அரசியல் இறுதித் தீர்வு காணும்வரைக்கும் பின்வரும் வசதிகளை அமைத்துத் தருமாறு தங்களது அரசை வேண்டுவதே இந்த மகஜரின் முக்கிய நோக்கமாகும்.

● இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு இடம் மாறிய சகல அரசாங்க தமிழ் ஊழியர்களையும், ஆசிரியர்களையும், மற்றவர்களையும் தங்கள் தங்கள் மாவட்டங்களில் கடமையாற்ற அரசாங்கம் ஒழுங்கு செய்தல் வேண்டும்.

● வருங்காலத்தில் தமிழ் மாணவர்களதும், ஆசிரியர்களதும், ஏனையோர்களதும் தராதரச் சோதனைகளும், அவர்களது நேர்முகப் பரீட்சையும், ஊழியர்களைத் தெரிவுசெய்வதும், அவர்களை மாற்றுவதும், அவர்கள் வாழும் தமிழ்ப் பிரதேசங்களிலேயே நடத்த அரசு ஆயத்தங்கள் செய்தல் வேண்டும்.

● வெளியூர் போகும் விமானப் பயணிகள் பலாலி விமானத் தளத்திலிருந்து புறப்படவும், அங்கு திரும்பி வரவும் வசதிகள் அமைத்துக் கொடுத்தல்வேண்டும்.

● தமிழர்கள் இறக்குமதி ஏற்றுமதி செய்வதற்கும், போக்கு வரத்துச் சேவைக்கும் காங்கேசன்துறை, திருகோணமலைத் துறைமுகங்களை ஏற்றவாறு அமைத்தல் வேண்டும்.

### யாழ்ப்பாணத்தில் தூதரகக் கிளைகள்...

● எல்லா நாடுகளுக்கும் போக்கு வரத்துச் செய்வதற்கான சர்வதேசக் கடவுச்சீட்டு வழங்குவதற்கான அதிகாரத்தை யாழ்ப்பாணக் கடவுச்சீட்டு அலுவலகத்திற்குவழங்குமாறும், அனுமதிச் சீட்டு வழங்க வெளிநாட்டுத் தூதரகங்களை யாழ்ப்பாணத்தில் கிளை அலுவலகத்தைத் திறக்குமாறு கேட்கவும் நாம் கோருகின்றோம்.

● கீழ்மட்ட நீதிமன்றங்களிலிருநது போகும் மேன் முறையீடுகளையும், மீளாய்வு மனுக்களையும், ஆணை பிறப்பிக்கும் மனுக்களையும் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மாவட்டங்களிலேயே ஏற்று விசாரிக்கும் வண்ணம் ஆவன செய்யவேண்டும்.

● தமிழ் மக்கள் தமதுஅலுவல்களைக் கொண்டு நடத்த அவர்களது பிரதேசங்களிலேயே வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

● தமிழர்களாகிய எமது அபிலாஷைகளையும், இறைமையையும் தங்கள் அரசு கணித்துக்கொள்ள வேண்டுமென விரும்புகிறோம். எமது பாதுகாப்பும், வசதிகளும் அதிமுக்கியமானது. அரசினதும் அதன் சிறு தொகையினரான ஊழியர்களினதும் வசதிகளிலும் பார்க்க மக்களது வசதிகளையே அரசு கூடுதலாகக் கவனித்தல் வேண்டும். தமிழ் மக்கள் இனிமேல் கொழும்புக்கோ அல்லது வேறு எந்தச் சிங்களப் பிரதேசத்திற்கோ சென்று வாழ்வது சாத்தியமில்லை. அப்படிச் செய்யேவது பயங்கரமானது. (க)

# கன்னித் திங்களில் கன்னியர் வழிபாடு

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்திஇன்பம் பெறும் பொருட்டேயாம். இது ஆறுமுகநாவலர் அவர்களின் அமுதமான அறிவு வாக்கியம். இவ்வாக்கியம் உள்ளத்தால் உள்ளப்படல் வேண்டும். கந்த புராண கலாச்சார விளை புலம் யாழ்ப்பாணம். இது பண்டிதமணி அவர்களின் உயிர் ஊட்டமான கருத்து. புரட்டாதி மாதத்தைக் கன்னித் திங்களென்பர். மூன்று பெண்மணிகளுக்கு கொலு வைத்து விழாவெடுத்துப் பூஜிப்பதால் இப்படியாயிற்றுப் போலும். தாய்நாடு, தாய் மொழி- என்பது போல தாய்த் தெய்வத்தை வழிபடுவதும் எம்மவர் மரபு. சைவசித்தாந்தம் முடிந்த முடிவான கொள்கைகளை உடையது. எனவே அவை இயம்பும் வழிபாடுகளும் மிகவும் மகத்தானவை. உலகில் தர்மம் தலை குனிய அதர்மம் தலைதூக்க, இதனைச் சமமாக்கிச் சீர்செய்யத் தோன்றுபவன் கண்ணன் என்கிறது கீதை. இன்றைய சூழ்நிலையில் கீதோபதேசமும், மத வழிபாடும் எவ்வளவு இறுக்கமும் முக்கியத்துவமும் வாய்ந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

சுக்கிலபட்சபிரதமை முதல் நவமிஈருக உள்ள ஒன்பது இரவுகள் முறையே துர்க்கை. இலக்குமி, வாணி என்பவர்களுக்குரிய உபாசனை நாட்களாகும். இம் மாதம் 21ம் நாள் இவ்விழா ஆரம்பமாகும். 30ம் நாள் விஜயதசமி விழாவுடன் முற்றும். தேவி திக்விஜயம் செய்து வாகைசூடியநாள் இதுஎன்பர். விஜயதசமியில் அன்று மாணவர்களுக்குக் கல்வி ஆரம்பிக்கப்படும். இது மரபுவழியாக வந்தவொரு நற்கருமம்.

### கனகசபாபதி

இதனைச் சமயச் சூழ்நிலையில் பெரியார் ஆசீர்வாதத்துடன் செய்தல் நலன் பயப்பதாகும். இதன் மறுபதம் வித்தியாரம்பம் எனப்படும். இதன் முதற்பதம் வித். வித் என்பது அறிவைக் குறிக்கும். எனவே அறிவைப் புலப்படுத்தல் என்ற செயலையே இது குறிக்கிறது.

ஊரின் நடுவண் அமைவது ஊருணி. இது ஊராரால் உண்ணப்படுவது இதில் அழுக்குப் படிந்து துர்நாற்றம் எடுததால் அதனைத் துப்புரவுசெய்து மீளவும் பாவிப்பது ஊரார்கடன். இதுபோலச் சமுதாயத்திலும் பல ஊறுபாடுகளால் அசுத்தம் அதிகமாகிவிட்டது. இதனைத் தூயசிந்தையால் மட்டும் சீர் செய்யமுடியும். நற்சிந்தனை, தூயவழிபாடு, நல்லாரிணக்கம், பண்டைமதவழிபாடுகள், கிரியைகள், திருவிழாக்கள், என்பன மீளவும் பண்டுபோல மீளாய்வுபெறப்படவேண்டும், கோயிற்வழக்கம் கல்வியில் ஒரு பங்கை வகிக்கவேண்டும். வாழ்விலும் அப்படியே. திருநாமம் அஞ்செழுத்தைச் செப்பி, திருக்கோயில் சூழ்ந்து, நல்லன கைகொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்பம் பெற கன்னித்திங்கள் வழி காட்டுவதாக.

## ஓம் சக்தி!

நெஞ்சுக்கு நீதி கொடு! அம்மா எங்கள்
நினைவுக்குக் கூர்மை கொடு!
வஞ்சத்தை மாய்ப்பதற்கே அம்மா கையில்
வாளாக வந்து நில்லு!
நஞ்சை அமுதாக்கு! அம்மா மாறு
நம்பிக்கை எமதாக்கு!
சஞ்சலம் எதுவரினும் வென்றிடும்
தாளாண்மை தீரம்கொடு!

தோளில் பலமாகு; நீயே எங்கள்
துயர்நீக்கும் துணையாகு!
தாளினைத் தலையில் வைத்தே எமை என்றும்
தலை நிமிர்ந்திருக்கவிடு!
மாளாத வாழ்வு கொடு: என்றென்றும்
மரணமிலா நிலையில்
நீளருள் விழியமுதால் எமக்கென்றும்
நித்திய வரங்கள் கொடு!

உள்ளம் நடுங்குவதோ! உன்மக்கள்
ஊக்கம் கெடுவதுண்டோ!
வெள்ளத் துயர்க் கடலில் சதாகாலம்
வீழ்ந்து தவிப்பது வோ?
பள்ளத்துள் வீழ்ந்தடிமைச் சிறுமைகள்
பயின்று புழுங்குவதோ?
தெள்ளுற்ற அருள் தெய்வமே! உடனிந்தச்
சிறுமையெல்லாம் தவிர்ப்பாய்!

'நிவேதிதா'

## வெள்ளோட்டம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தின் புதியசித்திரததேர் வெள்ளோட்டம் இன்று பிற்பகல் நடைபெறும்.

மூன்று லட்சம் ரூபா செலவில் இத் தேர் உருவாக்கப்பட்டது.

# கல்வயல் கொலை கொள்ளை வழக்கு இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

கல்வயல் கொலை, கொள்ளை வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் அனுராதபுர மேல்நீதிமன்ற நீதிபதி எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்றுவரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் கல்வயலில் 1978ம் ஆண்டு ஜூன் மாதம் 23ம் தேதி இ. சிதம்பரப்பிள்ளையைக் கொலை செய்ததாகவும், அதே நேரத்தில் அதே இடத்தில் இராசம்மாவிடம் 450 ரூபா கொள்ளையடித்ததாகவும், இராசம்மாவிடம் 3,200 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாகவும், கொலைக்கும், கொள்ளைக்கும் சதி நடத்தியதாகவும், சின்னத்துரை தங்கேஸ்வரன், குமாரசிங்கம் சிவபாதம், தம்பு கந்தசாமி, சரவண மாணிக்கசிவம், சுப்பிரமணியம் சிவபாலன், சுந்தரலிங்கம் நகுலேஸ்வரன் அல்லது மோகன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (க)

## அகதிகளுக்கு வைத்திய உதவி

(மன்னார்)

மன்னார் தேவாபுரம் அகதிகள் முகாமிற்குச்சென்ற வைத்தியக் குழு ஒன்று அகதிகளுக்கு இலவச வைத்திய பரிசோதனைகளை நடத்தியது.

வைத்திய பரிசோதனை பெற்ற அகதிகளுக்கு திட்டமிடல் அமைச்சின் உணவுப் போஷாக்குப்பிரிவினூற் மருந்து வகைகள் வழங்கப்பட்டதுடன் தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டது. (க)

## கருத்தரங்கு

(புலோலி)

தேசிய இளைஞர் சேவை மன்ற கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை குடத்தனையில் இளைஞரும் போதை வஸ்துவும்'' என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது.

டாக்டர் ஆர்.ஈ.சாந்தகுமார் கருத்துரைகளை வழங்கினர். பருத்தித்துறை தொகுதி தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு வே.விவேகானந்தன் கருத்தரங்குக்கு தலைமை வகித்தார்.

## இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தை இழக்க நேரிடும்வேண்டாத தொடர்புகளால்வேதனை அடைவீர் சௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

மீனம்- மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்பு உண்டு கற்றதனுல் பலன் கைமேல் கிடைக்கும் புதிய வாகனம் கொள்வனவு செய்ய உகந்த தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


Personal Classes for
G. C. E. (A/L) 1984
தூய பிரயோக கணிதம்
பகல் நேர வகுப்பு ஆரம்பம்: 19-10-83

பிரிவு:I 8-00:காவிகள் / 9-00:திரிகோயகணிதம்
பிரிவு:II 10-30: எறியம் / 11-30: நுண்கணிதம்

மணியம்ஸ் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஸ்ரீதர் சினிமா-நாகவிகாரை இடையில்)

ஆசிரியர்
RAVIMOHAN
(9228)



யாழ். மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
உங்கள் குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள் ஆகியவற்றை உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் உங்கள் இல்லத்தில் அல்லது எங்கள் வேலைஸ்தலத்திற்குக் கொண்டுசென்று கைதேர்ந்த வல்லுனர்களால் பழுது பார்ப்பதற்கும்,
குளிர்சாதனப்பெட்டி பழுது பார்ப்பதற்குத் தேவையான சிறந்த உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவு பெற்றுக்கொள்வற்கும்
நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்
லீலா என்ஜினியரிங் வேக்ஸ்,
இல. 147, கே. கே. எஸ். வீதி,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
தொலைபேசி: மாவிட்டபுரம் 3
தலைமை அலுவலகம்:
இல. 400, கே. சிறில், சி. பெரேரா மாவத்தை,
கொழும்பு 13.
தொலைபேசி; 25933 (9192)



செல்வ, வீர, வித்தியா இலட்சுமி கடாட்சம் பெற நவராத்திரி தினங்களில் பண வைப்பீடு செய்வோர்க்கு 36% அதித வட்டி விசேட சலுகையாக மாதாந்தமும் வழங்கப்படுகிறது.





தமிழர் நிதியம்
நிதிநிறுவனம் பெருமையுடன் அளிக்கும்
அதீத வட்டி வழங்கும்
36% நித்யா முதலீட்டு முறித்திட்டம்

அதிக வருமானம் தரும் எமது முதலீட்டு முறித்திட்டத்தில் பங்கு கொண்டு உங்கள் பணத்தை பாதுகாத்து முதலீட்டைப் பெருக்கிட, தேர்ந்த அனுபவம் தீர்க்கமான வட்டி விகிதம், நம்பிக்கையும், நாணயமும் மிகுந்த சேவையுடன் கூடிய எமது சேவையை நாடுங்கள்!

குறைந்த பட்சம் ரூ.500/-ம் மற்றும் அதன் பெருக்கத் தொகைகளை 24 மாதம் அன்றில் 12 மாதங்கள் முதலீடு செய்து அதீத வட்டித் தொகையை மாதாமாதமோ வருடமொன்றிற்கோ, அன்றில் முதிர்வடையும் காலத்திலோ உங்கள் விருப்பப்படி பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்துடன் முதலீட்டாளரின் விருப்பத்திற்கமைய தேவை ஏற்படும் பொழுது முழுத்தொகையையும், மீளப்பெறும் அன்றில் முறிக்கெதிராக மேலதிக கடன் வசதி பெறும் வசதியையும் (கம்பனியின் பிரமாணங்களுக்கு அமைய) அளிக்கின்றோம்.

| காலம் | தொகை | பெறக்கூடிய வட்டி வீகிதம் | | | | முதிர்ச்சிக் |
|---|---|---|---|---|---|---|
| | | மாதம் | காலாண்டு | அரை ஆண்டு | வருடம் | காலம் |
| 2 வருடம் | 500/= - 99500/= | 27% | 28% | 29% | 30% | 36% |
| 2 வருடம் | 100000/= - 199500/= | 29% | 30% | 31% | 32% | 36% |
| 2 வருடம் | 200000/= அதற்கு மேற்பட்ட தொகையும் | 31% | 32% | 33% | 34% | 36% |
| 1 வருடம் | 500/= - 199500/= | 25% | 26% | 26% | 36% | |
| 1 வருடம் | 200000/= அதற்கு மேற்பட்ட தொகைக்கும் | 29% | 30% | 30% | 36% | |

THAMIL FUNDS AND FINANCE LIMITED
140 நாவலர் வீதி, யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா.
NAVALAR ROAD, JAFFNA, SRILANKA.
REGD NO: PVS 8483
☎ 437
SAVE FOR YOU & FOR YOUR FUTURE.



வெற்றிடங்கள்

★ GAS WELDERS (வாயு ஓட்டுனர்)
★ LOCKSMITHS (பூட்டுச் செய்வோர்)
★ BLACKSMITHS (கொல்லர்)
★ FITTERS (பொருத்துனர்)
★ TINKERS (உலோக வேலையாளர்)
★ MASONS (மேசன்மார்)
★ CARPENTERS (தச்சர்)

பூரண விபரங்களுடன் உடனே விண்ணப்பிக்கவும். தகுந்த சம்பளமும் எதிர்கால முன்னேற்றங்களும் உறுதியளிக்கப்படுகிறது.

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்
காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.



"Diploma in Computer Programming in Collaboration with Dataserve"
BASIC - COBOL
BASIC — 3 மாதங்கள் (பயிற்சி நெறி உட்பட)
COBOL — 2 மாதங்கள் (பாட நெறி மட்டும்)
பயிற்சி: — B. B. C. / GENIE } கலர் கொம்பியூற்றர்களில் அளிக்கப்படும்.
கட்டணம்: BASIC — 1750-00 / COBOL — 750-00
(தவணை முறை வசதி அளிக்கப்படும்)
வகுப்புக்கள் ஆரம்பம்: 15–10–83
உளச்சார்பு பரீட்சை: 14-10-83 9-00 மணிக்கு
(A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கட்காக)
சலுகைகள்: புலமைப்பரிசில்கள்,
இலவச ஆங்கில வகுப்புக்கள்.
தொடர்பு:
COMTECK COMPUTER INSTITUTE
No. 82, 3rd Cross St. Jaffna.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

## "தேசிய இளைஞர் சேவைமன்ற
# கிளிநொச்சி கலாசாலை
# அயராது சேவையாற்றுகிறது"

(கிளிநொச்சி)

"அரச உத்தியோகங்களை எதிர்பாராமல் இளைஞர், யுவதிகள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட தேசிய இளைஞர் சேவை மன்றம் ஊக்கமளிக்கிறது. இந்நோக்கத்தை நிறைவு செய்யவே தமிழ்ப் பகுதிக்கென நிறுவப்பட்ட கிளிநொச்சிக் கலாசாலை அயராது பாடுபடுகிறது. இக்கலாசாலை குறுகிய காலத்தில் பயிற்சியளித்ததையிட்டு மகிழ்ச்சியும் பெருமிதமடைகிறேன்"

இவ்வாறு கிளிநொச்சிதேசிய இளைஞர் சேவை மன்ற பயிற்சிக் கலாசாலையில் ஆறுமாத கால விவசாயப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் 16 பேருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டுஉரையாற்றிய தேசீய இளைஞர் சேவைமன்ற உதவிப் பணிப்பாளர் ஏ. நாகேந்திரன் குறிப்பிட்டார்.

இப்பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு எஸ். தர்மசீலன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் இளைஞர் சேவை மன்ற வடபிரதேச பிரசார அதிகாரி திரு. சிவானந்தமூர்த்தி, யாழ்ப்பாணமாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு தேவராசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

பயிற்சிக்கலாசாலை அதிபர் எஸ். தர்மசீலன் தமது தலைமையுரையில் கூறியதாவது:

எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் இப்பயிற்சிக் கலாசாலை வளர்ச்சிபெற்றுவருகிறது. தமிழ் பகுதிக்கான கலாசாலையை கிளிநொச்சியில் நிறுவ அரசு விரும்பி இடத்தைத் தெரிவு செய்த போது இப்பகுதி மக்கள் ஒத்துழைப்புத்தர பின் வாங்கினர்கள். இதனால் இளைஞர் சேவைமன்ற அதிகாரிகள் அநேக துன்பங்களை அனுபவித்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

எந்த முயற்சியும் வெற்றிபெற பொது மக்களினது ஆதரவு தேவை. எதிர்வரும் ஜனவரி மாதமளவில் விடுதிக் கட்டிட வேலைகள்பூர்த்தியடைந்ததும் பூரணத்துவமான பயிற்சியை மாணவர்கள் பெற முடியும்"

இளைஞர் சேவைமன்ற அதிகாரிகள் எம். சற்குணராசா, சிவதட்சணாமூர்த்தி, பரராசசேகரம் ஆகியோரும் உரையாற்றினர்கள். பழைய மாணவர் மன்றத்தினரின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. பயிற்சிபெற்று வெளியேறியோருக்கான சான்றிதழ்களை உதவி இயக்குனர் திரு ஏ. நாகேந்திரன் வழங்கினர். இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு வெளியேறும் முதற்தொகுதி மாணவர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரூபவாஹினியில்
# இன்று

6-00 - இன்றைய நிகழ்ச்சிகள்.
6-02 - 'பிக் புளு மாபிள்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-30 - சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7-00 - செய்திகள் (தமிழ்)
7-14 - நாளைய நிகழ்ச்சிகள்
7-15 - சிங்கள நிகழ்ச்சி
7-45 - அரச நடனக்குழுவின் நிகழ்ச்சி
8-15 - செய்திகள் (சிங்களம்)
8-45 - தமிழ் திரைப்படம்
9-30 - செய்திகள் (ஆங்கிலம்)
9-50 - தமிழ் திரைப்படம் தொடர்ச்சி
11-30 - நிகழ்ச்சிகள் முடிவு.

# இன்றைய பலன்

புரட்டாதி 26-ம் திகதி
புதன்கிழமை
(12-10-83)

மேடம்- துள்ளிவரும் வெள்ளிப்பணம் தொடர்புகளை பெருக்க வைக்கும் தள்ளி வைத்தவர்கள் உங்களை அள்ளி அணைப்பார்கள் அன்பின் அணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும்.

இடபம்- தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும் நண்பர்களே காலைவாரி விடக் கூடும் சிலருக்கு அன்னிய சகவாசம் ஆபத்தில் முடிக்கும் தூரதேசச் செய்திகள் துயரத்தில் ஆழ்த்தும்.

மிதுனம்- களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம்பெறும் முத்தான சந்திப்பொன்றும் முதியவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

கடகம்- சிரித்துப் பேசுபவர்கள் இன்று சீறி விழுவர் உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும் வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார்கள்.

சிங்கம்- பூமியால் லாபமுண்டு புத்திரர் புகழும்சேரும் பொதுசனத் தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கும் புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் பத்திரிகையாளர்களாயின் வேதனம் உயர்த்தப்படலாம்.

கன்னி- வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர் தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் எதிரிகள்மத்தியில் ஏற்பட்ட மனமாற்றம் செல்வாக்கை வளர்க்கும்.

துலாம். வணிகத் துறையில் முன்னேற்றம் காணப்படும் நீண்டநாள் கொடுக்கல்வாங்கல் நிவர்த்தியாகும் மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் வரவேற்க வேண்டிய தினம்.

விருச்சிகம்- எதிர்பாராத செலவீனங்களால் பாதிக்கப்படுவீர்கள் கடன் வாங்கவும் நேரிடலாம் சமீபத்தில் நடைபெற்று முடிந்த சம்பவமொன்று மனதிற்கு வேதனை தரும்.

தனு- கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும் எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம் அடக்கத்துடனும் நிதானத்துடனும் நடந்து கொள்ளவும் நண்பர்களினுல் தொல்லை உருவாகும்.

மகரம்- வார்த்தை ஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள் எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம் இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும் பிரச்னையை பேச்சினுல் சமாளித்துக் கொள்வீர்.

கும்பம்- கொள்கையின் கோணலால் நல்ல சந்தர்ப்

(5ம் பக்கம் பார்க்க)

## பின்னுறுதிக் கட்டளை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்

குப்பிளான்ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேல் அன்னப்பிள்ளை என்பவரின் மரணசாதனமில்லா சொத்தினதும் உடமைப்பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்

வழக்கு இலக்கம்:
தத்துவம் 85

பொன்னையா நடராசா
21/1, அன்ன சத்திர ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்

எதிர்

1. விஸ்வலிங்கம் கைம்பெண் சிவபாக்கியம்
2. பொன்னையா ஐயம்பிள்ளை
3. விஸ்வலிங்கம் சோமசேகரம்
4. விஸ்வலிங்கம் அருளானந்தம்
5. நாகலிங்கம் கதிரமலை யாபேரும் குப்பிளான், ஏழாலை.

எதிர் மனுதார்கள்

இவ்விடயம் 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 28ம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிபதி சீ. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் முன்னிலையில் மனுதார் சார்பில் சட்டத்தரணி திரு. கா. ஜெகநாதன் சமூகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதரின்30/12/1980ந் திகதி கொண்ட மனு சத்தியக் கூற்று ஆகியவை வாசிக்கப் பெற்று,

மேற்கூறிய எதிர்மனுதார்களோ அல்லது அக்கறையுள்ள வேறு ஆள் எவரேனும் இந்நீதிமன்றில் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ம் திகதியன்று காலை 9-00 மணிக்கு அல்லது அதற்கு முன் நீதிமன்றினைத் திருப்திப்படுத்தக்கூடிய எதிர்க்காரணம் காட்டினுலன்றி மேற்கூறிய மனுதார், இறந்தவரின் வாரிசு என்ற முறையில், மேற்கூறிய சொத்துக்களை நிருவகிப்பதற்கு நிர்வாகப் பத்திரங்களைப் பெற உரித்துடையவர் என இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28ம் திகதியாகிய இன்று,

மாவட்ட நீதிபதி.

கா. ஜெகநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.
9218

அரிய சந்தர்ப்பம்

Computer Programming BASIC-COBOL

Computer மொழிகளில் கூடிய நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.

● T. V. ● வீடியோ டெக் றிப்பெயறிங் ● எலக்றிக்கல் வயறிங்
● Hotel Management ● வெல்டிங் ● எயர்கொண்டிசனிங்

SPOKEN ENGLISH, FRENCH

புதிய பயிற்சிகள் ஆரம்பம்: 20-10-83

The School of Computer Studies

52/1, கனகரத்தினம் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, – – யாழ்ப்பாணம்.

இல்லங்கள் அழகுபெறும் மரத்தளபாட மாளிகை!

● வெளிநாட்டுப் பாணியில் உள் நாட்டில் உருவாகும் உயரிய மரத்தளபாடங்களுக்கு

● இல்லத்தரசிகளின் இல்லங்கள் அழகுபெறும் நவீன மரத்தளபாடங்களுக்கு

நகரில் ஓர் நம்பகரமான ஸ்தாபனம்

- ருஜாந்தி பேணிச்சர்ஸ் -

காட்சி அறையில் கண்ணைக் கவரும் மரத்தளபாடங்களைப் பார்த்து வாங்கிட விரையுங்கள்

ருஜாந்தி பேணிச்சர்ஸ்

234/3, ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

English Department

பின்வரும் பாடநெறிகள் 15-10-83ல் மீண்டும் ஆரம்பம்

1. INTEGRATED SPECIAL ENGLISH
2. TOEFL COURSE
3. SPOKEN ENGLISH
4. A. L. ENGLISH LITERATURE
5. O. L. REVISION ENGLISH

ஆசிரியர்கள்:
திரு. T. N. பஞ்சாட்சரம்
திரு. R. S. நாயகம்

★ இலவச பாடக் குறிப்புகள்

விபரங்களுக்கு:-

ASTAN INSTITUTE
166/1, Hospital Road Jaffna.

**லதா** (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். -லதா
**நவரத்தினம்**

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
**சகலகலா வல்லவன்**

**ராஜா** [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
[கலர்]

**மனோகரா**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி - பத்மினி
நாகேஷ்
**குலமா குணமா**
(புதிய பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-
ராஜீவ் **துணை**
(கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00.
4-30, 7-00
Roger Moore in
**NORTH SEA HIJACK**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10.30, 2.15,
4.45, 7.00
Eastwood Escape
ESCAPE FROM
**Alcatraz**
(adults only)
(action film)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Bruce Lee in
**ENTER THE DRAGON**
Limited Engagement
For the last time in Jaffna
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்
சில தினங்கள் மட்டும்
யாழ். நகரில் கடைசி
தடவையாகத் திரையிடப்
படுகிறது.
Next :
IT COULD HAPPEN
TO YOU
(A Film on V. D.)

தடைசெய்யப்படுமா?
**றீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30,
4-45, 7-00 p.m.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR
எந்த நேரமும் தடை
செய்யப்படலாம்! ஆகவே
இன்றே பார்ப்பது நன்றே

**சாந்தி** யாழ்நகர்
10.30, 2.15, 4.45, 7.00
The Comedy for
Every one whos had
it up to Here...
ROBERT HAYS Hasn't
had this much fun
since "AIR PLANE"!
**"Take This Job And Shove It"**
action - comedy - color
sex - adults only


## சிரமதான மூலம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று சித்தன்கேணியிலுள்ள லயன்ஸ் கழகத்தொழிற் பயிற்சி நிலையத்தில் கழகத் தலைவர் டாக்டர் எஸ். நாகநாதர் தலைமையில் நடைபெற்றது. இப்பகுதியிலுள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள் சன சமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். எதிர்வரும் 21-ம் திகதி இந்த சிரமதானப்பணியை நடாத்துவது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.


தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்
கைதடி.
**கேள்விப்பத்திர அறிவித்தல்**

3099 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவுத் திகதி 25-10-1983. விண்ணப்பப்பத்திரங்களுக்கும், விபரங்களுக்கும் சங்கவேலைநேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
கைதடி. 1983-10-10
9240

**பாரதி கலா மன்றம்**
யாழ். நகர மண்டப முன்
புதிய வகுப்புகள் ஆரம்பம்
16-10-83 காலை 9-00 மணி
நடனம் - பாட்டு - வீணை
திருமதி ஞானமணி செல்லையா
திருநெல்வேலி. றேயல் டிஸ்பென்சரி
போன் 22397 (9244)

புதிய பரதநாட்டிய, வாய்ப்பாட்டு
**வகுப்புக்கள் ஆரம்பம்**
பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களால்
வட இலங்கை சங்கீதசபை பாடவிதிகளுக்கமைய
நடத்தப்படும்.
பரதநாட்டியம், வாய்ப்பாட்டு வகுப்புக்களுக்கு
16-10-83 ஞாயிற்றுக்கிழமை விஜயதசமியன்று
புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.
அனுமதிக்கும் இடங்கள்:
16-10-83 காலை 9-00 — 12-00 மணி வரை
"கந்தன் அருள்", 54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
16-10-83 பிற்பகல் 2-00 — 4-00 மணி வரை
215, சப்பல் வீதி (Chapel Street) யாழ்ப்பாணம்.
நாட்டியக் கலைமணி
செல்வி நளினி அரசத்தினம்,
"கந்தன் அருள்", அதிபர்,
54, ஸ்ரான்லி வீதி, அரஸ்கோ நிருத்தனாலயம்.
யாழ்ப்பாணம். (தொலைபேசி எண்: 23175) (9229)

**காணிகள் விற்பனவு**
1. உடுவில் மருதனாமடத்தில் 4 பரப்புக் காணி.
2. உடுவில் (ஆலடி) 4 பரப்புக் காணி
3. யாழ். பலாலி நாவலர் வீதி அண்மையில் 2 பரப்புக் காணி (நாலு பக்கமும் சுற்று மதிலுடன்)
4. யாழ். அரியாலை யூதா கோவிலடியில் 10 பரப்புக் காணி.
5. யாழ். கொழும்புத்துறை துண்டி றோட்டில் 11 பரப்பு.

விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
போன்: 23698

**பரதநாட்டியம்**
போதனையுடன் கூடிய பயிற்சி வகுப்புகள்
15-10-1983 ல் ஆரம்பமாகின்றன
● சென்னை அடையாறு அரசினர் இசைக் கல்லூரிப்பட்டதாரி, வகுப்புகளை நடத்துவார்.
**கலாலயம்**
14, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அண்மையாக)
சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.
(9158)


## முதலாண்டு நினைவஞ்சலி

திருமதி கலாநிதி தர்மகுலசிங்கம்
14-10-1983

தோற்றம் 26-9-1958 | மறைவு 8-10-1982



சீரோடு வாழ்ந்த உம்மை சிந்தனையில்
ஏற்றிவைத்தே
நீரோடும் கண்களுடன் நித்தம் உம்மைத்
துதித்திருப்போம்.

கணவன், மகன், பெற்றோர், சகோதரர்கள்.

கலாபவனம், நெடியகாடு வடக்கு,
வல்வெட்டித்துறை. 9139


Diploma in
Computer Programming
புதிய வகுப்பு 15-10-83இல் ஆரம்பமாகிறது
செய்முறை:
Commodore கொம்பியூட்டர்களில் முழுமையான பயிற்சியளிக்கப்படும்.
கட்டணம்:
Level I, II and III — 1050 ரூபா
Computer Application — 750 ரூபா
(குறிப்பு: மாணவர்கள் தவணை அடிப்படையில் பணம் செலுத்தலாம்)
எமது ஸ்தாபனத்தில் கம்பியூட்டர் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும் சிறந்தமுறை கையாளப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
**DIGITAL COMPUTER CONSULTANTS**
(Insurance Corporation ற்கு முன்னால்)
615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(9245)



உங்கள் மங்கள வைபவங்களை
வீடியோவில் படம் பிடித்துக் கொள்ள
உத்தரவாதத்துடன் ரீ.வி ஏரியல்
அமைத்துக் கொள்ளவும்

வீனஸ்
226/1, ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

நியூ வீனஸ்
79/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## பூம்புகார் கொலை வழக்கு:

# “1ம் எதிரிவிசில் அடித்ததும் 20 பேர் வந்தார்கள்”

### காயமடைந்தவர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

‘‘கடையில் ராசேந்திரம் சத்தம்போட்டுக்கொண்டு நின்றபோது ‘அண்ணை சத்தம்போட வேண்டாம் போங்கள்’ என்று கூறினேன். அவர் எனக்குத் தலையில் அடித்தார். அதனால் காயம் ஏற்பட்டது’’

பூம்புகார் கொலைவழக்கில் சாட்சியமளித்த ச. யேசு குறுக்கு விசாரணையின்போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் திரு. எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது,

இவ்வழக்கில் அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த ம தியாகராசா, ஐ. இரத்தினம், பொ. மகேந்திரன், பொ. குலேந்திரா, ப, துரைசிங்கம், விஜயகுமார், மா. மகேந்திரராஜா ஆகியோர் சட்டவிரோதமாக கூட்டம் கூடி ச. மோசஸ் என்பவரை கொலைசெய்ததாகவும், சி. திருநாவுக்கரசுவின் கடைக்கு சேதம்விளைவித்ததாகவும், 4ம், 7ம் எதிரிகள் த. சுகுமாருக்கு படுகாயம் விளைவித்ததாகவும், 1ம், 6ம், 7ம் எதிரிகள் ச. யேசுவுக்கு காயம் ஏற்படுத்தியதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 1ம், 2ம், 7ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும், 3ம், 5ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செல்வி விஜயா சிதம்பரநாதனும் 4ம், 6ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ரி. லிங்கராஜாவும் ஆஜரானார்கள். வழக்காளி தரப்பில் பொலிஸாருடன் சட்டத்தரணி என். சபாநாதன் ஆஜரானார்.

சட்டத்தரணி ரி. லிங்கராஜா குறுக்குவிசாரணை செய்கையில், ச. யேசு மேலும் கூறியதாவது: எனக்கு அடி விழுந்ததும் நான் கீழேவிழுந்துவிட்டேன். சுகுமார் என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார். இது 28ம் தேதி நடந்தசம்பவம் 29ம் தேதி மற்றுமொரு சம்பவம் நடந்தது. அன்று 1ம் எதிரி, கடைக்குவந்து சுருட்டுவாங்கினார். பின் 4 அடி தள்ளிப்போய் விசில் அடித்தார். 20 அல்லது 22 பேர் வந்தார்கள். எனக்கு அடித்தார்கள். நான் மயங்கி விழுந்தேன் தலையில் காயங்கள் ஏற்பட்டன. அந்த இடத்திலிருந்து வீட்டுக்கு போனேன். 3-ம், 5-ம், எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி செல்வி விஜயா சிதம்பரநாதன் குறுக்குவிசாரணை செய்கையில் சாட்சியான யேசு சம்பவதினத்தன்று மங்கல் வெளிச்சமாக இருந்ததாகவும் ஒரு இடமும் வெளிச்சம் இல்லை என்றும் கூறினார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

---

## குடாக்கனை கொலை வழக்கு:

# பிணைமனு விசாரணை 17ல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் குடாக்கனை கொலை வழக்கு பிணைமனு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் சுழிபுரத்தைச் சேர்ந்த வைரவன் கந்தசாமி என்பவர் சுழிபுரம் குடாக்கனையைச் சேர்ந்த கணபதி சங்கரன் என்பவரை குடாக்கனையில் வைத்து கத்தியால் குத்திக்கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணிகள் செல்வி விஜயா சிதம்பரநாதன் ரி. லிங்கராஜா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிரி விளக்கமறியலில் வைக்கப்பட்டு 6 மாதங்கள் முடியவில்லை என்ற காரணத்தினால் தான் சட்டமா அதிபருடன் தொடர்புகொண்டு தமது சம்மதத்தை தெரிவிக்க அவகாசம் வழங்குமாறு அரச சட்டத்தரணி தெரிவித்தார். இதைத் தொடர்ந்து நீதிபதி பிணைமனுவிசாரணையை, இம்மாதம் 17ம் தேதிவரை ஒத்திவைத்தார். (க)

---

## மரண அறிவித்தல்

### செல்லர் டேவிட்

செல்லர் டேவிட் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற செல்லர், ரூசமுத்து ஆகியோரின் அன்பு மகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பெனடிற், டெனீஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரேசம்மா, அருளம்மா ஆகியோரின் மைத்துனரும், கிறேகறி தங்கராசா (பிரான்ஸ்]. அல்வின் (சவுதி), அலெக்ஸ், தேவு புவனு, ருஜேஸ் (பிரான்ஸ்), குமார்(பிரான்ஸ்), ரவி(பிரான்ஸ்), செல்லக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராணி, ருகிலா, றெஜீனு, ருஜினி, செல்வம்(டோகா), கீதபொங்கலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், உஜி, தங்கா, மக்ஸி, பிறின்ஸி, உஷா, ஆஷா, றெக்ஷன், மேரி, சதீஸ், உதயன், பொபி, அகில், ஜெறின், ஐறின், உமா, உதயாஜினி, உதேஸ், நிக்ஷன், கவிதா, தீபா, திலக், அஜீத் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் மத்தியூஸ் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று [ 12 - 10 - 83 ] புதன்கிழமை மாலை 4-30 மணியளவில் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

9239

---

## நவராத்திரிவிழா

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.

ஆத்மஜோதி நா. முத்தையா தினசரி அதிகாலையில் கலைமகளின் சிறப்புகள் பற்றி அகதிகளுக்கு விளக்கிவருகின்றார்.

நவராத்திரிவிழாவின் இறுதி நாள் வைபவத்தினை முகாம் நிர்வாகிகள் பொறுப்பில் விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது. (கி)

---

## யாருடையது

திருநெல்வேலி - தெற்கைச் சேர்ந்த திரு. எஸ். ஐங்கரமூர்த்தி என்பவர் யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலுக்கு முன்பாக ஒரு திறப்புக் கோர்வையைக் கண்டு எடுத்து ‘ஈழநாடு, காரியாலயத்தில்ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

●

யாழ்ப்பாணம் சாந்தி தியேட்டரில் கண்டு எடுக்கப்பட்ட ஒரு லேடிஸ் கைக்கடிகாரம் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

0 0 0

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் கண்டு எடுக்கப்பட்ட கடற்படை சிவிலியன் அடையாள அட்டையும், தேசிய அடையாள அட்டையும் திரு வி.முருகன் என்பவரால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## அரியாலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். சட்ட வைத்திய அதிகாரி வைத்தியகாலாநிதி எஸ். சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தபின்னர் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

இச்சம்பவத்துக்கு உடந்தையானவர் எனக்கருதப்படுபவர் இன்னும் பொலிசாரால் கைது செய்யப்படவில்லை. (மா)

---

## பாண்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

50 சதமாக விற்பனை செய்யப்பட்டது.

விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்களான திருவாளர்கள் கே. இரத்தினம், எஸ். ஜெகநாதன், கே. சோதிலிங்கம், கே. முருகையா ஆகியோர் இத்திடீர் சோதனையை நடாத்தி நிறை குறைந்த பாணைக் கண்டுபிடித்தார்கள். (க)

---

## திருமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தும் ராஜினாமாச்செய்துள்ளபோதிலும் அவர் தமது ராஜினாமாக் கடிதத்தைக்கொழும்பிலுள்ள தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ளமையினால் அது முறைப்படி அனுப்பப்படவில்லை என்றும் அவரது இடம் இன்னும் நிரப்பப்படவில்லை என்றும் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

டாக்டர் சிவானந்தன் தற்போது வெளிநாடு சென்றிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தம்பையா மாணிக்கவாசகர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த தயானந்த ஜெயவீர ஆகிய இரு உறுப்பினர்களும் தொடர்ந்தும் பதவி வகித்துவருகின்றனர்.

---

## இப்படியும் நடக்கிறது

ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையின் சில பாடங்களின் கேள்வித் தாள்கள் முன்னதாகவே வெளி வந்துவிட்டதாக செய்தி அடிபட்டது நீங்களும் அறிந்ததே.

இதில் பெரிய (பரம) இரகசியமும் உண்டு.

தலைநகரில் சில கேள்வித் தாள்கள் முன்னதாகவே வெளிவந்ததும், இவை அவசரம் அவசரமாக தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு ‘ரூனியோ’ வடிவத்தில் பல பகுதிகளுக்கும் சுற்று நிருபமாக அனுப்பப்பட்டன.

இதில் வேடிக்கை என்னவென்றால் —

தமிழ் மொழிபெயர்ப்பைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகள் சிலர் முழு வேகத்தில் ‘கரைத்துக் குடித்து’ பரிட்சை மண்டபம் சென்று முழித்துக்கொள்ள; வேறு சிலர், நிதானமாக - சொந்த அறிவுக்கிணங்க கேள்விகளுக்கு மறுமொழி எழுதித் திருப்தி கொண்டுள்ளனர்.

இதில் என்ன வேற்றுமை? முழு வேகத்தில் சென்ற பரீட்சார்த்திகள் ‘முட்டை’ வாங்குவது நிச்சயமாம்! காரணம்; சிங்களத்திலிருந்து அந்தக் கேள்விகளை மொழி பெயர்த்ததில் முழி பிதுங்கிவிட்டதாம். அதாவது மொழி பெயர்ப்பில் ஏராளமான பிழைகளாம்!

சப்பித் தின்றவர்கள் ......... !

— ஊடுருவி

---

## சுண்டிக்குளி கொலை 3 சந்தேக நபர்

# பிணையில்செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவலிங்கம் கொலைதொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. எஸ். நாகராசா முன்னிலையில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோது, தலா 2,500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த செப்டம்பர் 12ம் திகதி எஸ். சிவலிங்கம் யாழ். கச்சேரிக்குஅண்மையில் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக அரியாலையைச் சேர்ந்த ப. புஷ்பநாதன், வே. அரியரத்தினம், த. கிருஷ்ணபாலன் ஆகிய மூவரும் யாழ். பொலிசாரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

1ம், 2ம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி திரு. எஸ். லோகேஸ்வரனும், 3வது சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஜனுப் இமாமின் அனுசரணையுடன் சட்டத்தரணி திரு. இராஜா விசுவநாதனும் ஆஜராகி இருந்தனர்.

இக்கொலைச் சந்தேகநபர்களைத் தொடர்ந்தும் சட்டப்படி விளக்கமறியலில் வைத்திருக்கமுடியாது என சட்டத்தரணிகள் வாதிட்டதை அடுத்து நீதிபதி சந்தேகநபர்களை பிணையில்செல்ல அனுமதித்து மேல்விசாரணையை டிசம்பர் மாதம் 5ம் திகதிவரை ஒத்திவைத்தார். (மா)

---

## மரண அறிவித்தல்

### தம்பி

இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பருத்தித்துறையை இருப்பிடமாகக் கொண்டவருமான தம்பிமுத்து தம்பி (ஆசிரியர் நைஜீரியா) நைஜீரியாவில் 2-10-83 இல் காலமானார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தம்பிமுத்து சின்னப்பாபிள்ளை (சகோதரர்)
இடைக்காடு, அச்சுவேலி.

9258

---

## மரண அறிவித்தல்

### சின்னப்பு செல்வநாயகம்

(அப்போதிக்கரி R. M. P.)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் குப்பிழான் வாசியுமான இளைப்பாறிய அப்போதிக்கரி சின்னப்பு செல்வநாயகம் காலமாகிவிட்டார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும் கிமாவதி தேவி (ஆசிரியை), புவிராஜசிங்கம் [பொறியியலாளர், இலங்கைப் போக்குவரத்துசபை], கமலாவதிதேவி ஜெயராசசிங்கம் (கணக்காளர் இலங்கைப் போக்குவரத்துச் சபை), பரராசசிங்கம் (இலங்கை விமான சேவை) ஆகியோரின் தந்தையாரும் ஆறுமுகம் (ஆசிரியர்), ராஜேஸ்வரன் (ரெலிபோன் தந்திப் பரிசோதகர் - அபுதாபி), செல்வராணி ஆகியோரின் அன்பு மாமனும் தம்பிராசாவின் அன்புச் சகோதரரும், திருமதி தங்கப்பிள்ளை சுப்பையாவின் மருமகனும் நடராஜா, கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு குப்பிழான் பொது மயானத்தில் நடைபெறும்.

தகவல்: புவிராஜசிங்கம் - பொறியியலாளர்
(இலங்கைப் போக்குவரத்துச்சபை)

9251

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Number B 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telegram, Eelanadu, Telephone, 22389—24126.